

சுபீட்சம்

மட்டக்களப்பு மாவட்டமே முன்னிலை வகிக்கின்றது

உல்லாச புரியாகும் உன்னிச்சை

பொதுமக்கள் தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டுகோள்

ஆட்சியாளர்களின் அவமானமாக திருக்கோணேஸ்வரம்

வெற்றியும் தோல்வியும்

பதவி இழப்பாரா?

# சுபீட்சம் பத்திரிகை வெளியீட்டு விழா

திருகோணமலையில்...













மட்டக்களப்பில்...



# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 20.02.2021 supeedsam.com supeedsam@gmail.com









# துணிந்து எழுதுங்கள்

## திருமலை நவம்

(பொன் ஆனந்தம், கதிரவன்)

கிழக்கின் செய்திகள் வெளிப்படையாக வர வேண்டும்.பத்திரிகையாளர்கள்துணிச்சலோடு துணிந்து எழுதவேண்டுமென மூத்த ஊடகவியலாளரும் இலக்கியவாதியும் ஓய்வுபெற்ற அதிபருமான திருமலைநவம் தெரிவித்தார்.

திருமலையில் நேற்று நடைபெற்ற சுபீட்சம் வாராந்தபத்திரிகையின் வெளியீட்டு நிகழ்வின் போது கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

# வீரமுனையில் ஆசிரியருக்கு கொரோனா

( வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்திலுள்ள வீரமுனை இராமகிருஸ்ணா மகா வித்தியாலயத்தில் கற்பிக்கும் சம்மாந்துறை ஆசிரியரொருவருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியரின் மனைவியும் ஒரு ஆசிரியை. அவர்

02 ஆம் பக்கத்தில்...

# பாம்பு தீண்டியதில் 2 மாத குழந்தை பலி

## கரடியனாறு சின்ன புல்லுமலையில் சம்பவம்



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்ட கரடியனாறு பொலிஸ் பிரிவு, சின்ன புல்லுமலையில் சம்பவம்.

15012020 அன்று திருமணமான இளம் தம்பதிகளுக்கு, 24122020, அன்று தலைப்பிரசவத்தில்,

02 ஆம் பக்கத்தில்...

# முஸ்லிம் மக்களின் விடயங்களையும் உள்ளடக்கி கிழக்கு மாகாணப் பத்திரிகையாக சுபீட்சம் மிளிரவேண்டும்

## யதிந்திரா



முஸ்லிம் மக்களின் விடயங்களையும் உள்ளடக்கி கிழக்குமாகாணப்பத்திரிகையாக சுபீட்சம் மிளிரவேண்டுமென அரசியல் ஆய்வாளரும் எழுத்தாளருமான த.யதீந்திரா தெரிவித்தார்.

திருமலையில் நடைபெற்ற சுபீட்சம் வாராந்தபத்திரிகையின் வெளியீட்டு

02 ஆம் பக்கத்தில்...

# மட்டக்களப்பில் பொதுமக்களுக்கு இடையூறாக இருந்த வாகன தரிப்பிடம் மாநகர சபையினால் அகற்றப்பட்டது





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு அரசடி தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த வாகன தரிப்பிடம் பொதுமக்களுக்கு இடையூறாக இருப்பதாக மக்களிடம்

02 ஆம் பக்கத்தில்...

# தமிழ்தேசிய சொல்லாடலை நாளாந்த தமிழ் தேசிய வாழ்வியலாக மாற்றவேண்டிய தார்மிகப்பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு

## அருட் தந்தை எழில்



பின்முள்ளிவாய்க்கால் அரசியல் தளத்தில் பாரியபொறுப்புக்கள் ஊடகத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ் தேசியத்தின் செறிவாக்கம் இன்னும் அதிகமாக தேவைப்படும் இக்காலகட்டத்தில் தமிழ்தேசிய சொல்லாடலை நாளாந்த தமிழ்தேசியவாழ்வியலாக மாறறவேண்டிய தார்மிகப்பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு என நேற்று திருமலையில் நடைபெற்ற சுபீட்சம் பத்திரிகையின் வெளியீட்டு நிகழ்வில் ஆசியுரை வழங்கிய போது தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

# போராட்டத்தில் பங்கேற்றவர்களை தண்டிப்பதை விடுத்து, மக்களின் தேவை என்ன என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்

## இரா.சாணக்கியன்!



போராட்டத்தில் பங்கேற்றவர்களை தண்டிப்பதை விடுத்து, மக்களின் தேவை என்ன என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனிடம் வடகிழக்கில் உள்ள எட்டு பொலிஸ் நிலையங்களில் இருந்து வந்த பொலிஸ்

02 ஆம் பக்கத்தில்...






# மன்னாரில் இதுவரையும் 51 கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்

## பணிப்பாளர் த.வினோதன்



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் நடப்பு மாதத்தில் (பெப்ரவரி. 2021) கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 51 ஆக உயர்ந்துள்ளதாகவும் மொத்தமாக இது வரைக்கும் மன்னார் மாவட்டத்தில் 233 நபர்கள் இவ் தொற்று நோய்க்கு உள்ளாகி இருந்துள்ளதாகவும் மன்னார் சுகாதார சேவைகள்

02 ஆம் பக்கத்தில்...

# வர்த்தக சமூகத்தினதும், பொதுமக்களினதும் திருப்தியே மாநகர சபையின் வெற்றியாகும் மாநகர ஆணையாளர்



வர்த்தக சமூகம் பொதுமக்களும் இணைந்த கலந்துரையாடல் மாநகர சபையின் இலக்கு நோக்கிய செயற்பாட்டிற்கு இன்றியமையாததாகும். இந்த இரண்டு தரப்பாரின் திருப்தியே மாநகர சபையின் வெற்றியாகும் என மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் மா. தயாபரன் தெரிவித்தார்.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தினால் பொது, தனியார் சம்பாசனையை ஏற்படுத்தல் எனும் கருப்பொருளில்

02 ஆம் பக்கத்தில்...

# சீன அரசின் அனுசரணையோடு எம்மை அழித்த அரசு நாட்டை சீன காலணித்துவ நாடாக மாற்றி வருகின்றது

## பாராளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன்

(சந்திரன் குமணன்)

சீன அரசின் அனுசரணையோடு எம்மை அழித்த அரசு நாட்டை சீன காலணித்துவ நாடாக மாற்றி வருகின்றது தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்தினை தெரிவித்தார்.

மேலும் குறிப்பிடுகையில்...

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரணி குறித்து என்னிடம் வாய்மொழி மூல முறைப்பாட்டினை பெற்று சென்றுள்ளனர். இந்த நாட்டில் ஜனநாயகம் நிலைத்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் வட கிழக்கில் வாழும்

02 ஆம் பக்கத்தில்...




"கல்விக்கு கைகொடுப்போம்"

எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்

அறிவாலயம்

அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்

இலங்கை.

ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்

ARIVALAYAM FOUNDATION TRUST

தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை

arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206




# காரைதீவில் வர்த்தகர் சங்கம் உருவாக்கப்படும்

## உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளன முகாமையாளர் பிரதீப் கூறுகிறார்

**(வி.ரி.சகாதேவராஜா)**

காரைதீவுப்பிரதேசத்திற்கான வர்த்தகர் சங்கமொன்று புதிதாக உருவாக்கப்படும். அதனூடாக வர்த்தகர்கள் தமது வர்த்தகத்தை வளப்படுத்திக்கொள்ளமுடியும் என இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளன சிரேஸ்ட வேலைத்திட்ட முகாமையாளர் பி.பிரதீப் தெரிவித்தார்.

காரைதீவுப்பிரதேசத்திற்கான வியாபாரஆலோசனைக்குழு அமைக்கும் வேலைத்திட்ட செயலமர்வு நேற்று விபுலாநந்தகலாசார மண்டபத்தில் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் முன்னிலையில் நடைபெற்றது.

காரைதீவுப்பிரதேசத்தைச்சேர்;ந்த 62 தமிழ் முஸ்லிம் வர்த்தகர்கள் கலந்து கொண்டனர். அங்கு குழுநிலை கருத்துப்பரிமாற்றமும் சமர்ப்பணங்களும் நடைபெற்றன. வர்த்தகர்களால் முன்வைக்கப்பட்ட 41 கோரிக்கைகளுக்கு தவிசாளர் ஜெயசிறில் பதிலளித்துரையாற்றினார்.



இதுவரை காரைதீவில் இல்லாதிருந்த வர்த்தகர் சங்கம் இச்செயலமர்வு மூலமாக அமைக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். அதேபோல் வடிகான் அமைப்பதற்கான மாஸ்ரர்பிளன் இதுவரை இல்லாதிருந்தது. அதை தயாரிக்க திட்டமிட்டுள்ளோம். வாரஇறுதிச்சந்தையொன்றை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.மக்களைக்காப்பாற்றுவதற்கான சமுகமுடக்கத்தை வியாபாரத்திற்காக வேண்டாம் எனக்கூறமுடியாது. அதுபோல நடமாடும் வியாபாரிகளையும் தடுக்கமுடியாது. எனினும் பதிவுசெய்யப்பட்ட அங்கீகாரம் பெற்ற வர்த்தகர்கள் நீங்கள். உங்களது வர்த்தகத்தை வளமாக்கவே இன்று கலந்துரையாடியுள்ளோம். அது வெற்றியளிக்கும் என்றார்.

சம்மேளனத்தின் திட்டஅலுவர்களான ஆர்.சதினி மற்றும் சி.அஞ்சனா ஆகியோர் செயமர்வை நெறிப்படுத்தினர்.

# சீன அரசின் அனுசரணையோடு எம்மை அழித்த அரசு நாட்டை சீன ...

தமிழ் மக்கள் ,சிவில் அமைப்புக்களினாலும் பூர்வீக குடிகளின் மீது பெரும்பான்மை சமூகம் தமிழ் சமூகத்தின் கலை கலாசார விடையங்களில் தாக்கத்திம் அதிகரித்ததன் காரணமாக மக்களின் உணர்வு உரிமை ரீதியான பேரெழர்ச்சியாகவே பார்க்கின்றேன். இதில் அரசாங்கத்திற்கு ஒரு விடையத்தை தெளிவாக சொல்லியிருக்கிறார்கள் தங்களுடைய பூர்வீக நிலங்களில் நிம்மதியாக வாழ விட வேண்டும் என்பதை உணர்வு பூர்வமாக சொல்லியிருக்கிறார்கள் இதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு ஏற்றுக்கொள்ளாமல் மக்கள் பிரதிநிதிகளாகிய எம்மை துன்புறுத்தும் வேலையை அரசு மேற்கொள்கின்றது

அவ்வாறு தொடர்ந்தும் இருக்க முடியாது. இந்த நாட்டில் ஜனநாயகம் , சுதந்திரம் குறித்து பேசுகின்றனர் ஆனால் சிறுபான்மை சமூகமாகவுள்ள எங்களுக்கு நீதி சுதந்திரம் கிடைக்கபெறுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.எங்கு சென்றாலும் தமிழர்கள் தமிழ் பேசும் இனம் என்ற அடிப்படையில் இந்த அரசுகளால் நசுக்கப்படுகின்ற சூழல்தான் இருக்கின்றது. இந் நிலை மாற வேண்டும்.

இந்த நாட்டின் தலைவர் அனைத்து மக்களுக்குமான தலைவர் என்பதனை மறந்து பௌத்த மக்களுக்கு தான் தலைவர் என்றவகையில் பௌத்த தேரர்களின் சொற்படியே ஆட்சி செய்வேன் என்ற வகையில் கருத்தினை தெரிவித்துள்ளார்.இதனை நோக்கும் போது சனாதிபதியால் சிறுபான்மை சமூகம் வேறாகத்தான் பார்க்கப்படுகிறது. இங்கு நிலையான சமாதானமும் இல்லை சமத்துவமும் இல்லை என்பதனை ஒவ்வொரு விடையத்திலும் சுட்டிக்காட்டி முடியும்.அரசியல் அபிவிருத்தி , தொழில் வாய்ப்பு போன்ற விடையங்களில் வேறுபட்ட சிந்தனையுடன் தான் செயற்படுகின்றனர்.தொடரான சமாதானத்தை ஏற்படுத்த இந்த அரசாங்கம் முன்னெடுப்புக்களையும் ஏற்படுத்தவில்லை என்பதனை அவர்களது கடந்தகால செயற்பாடுகள் காட்டிக்கொண்டு இருக்கின்றது.

தமிழர்களின் நீண்டகால பிரச்சினைகளில் அரசாங்கம் எந்தவொரு தீர்வை நோக்கி நகரவில்லை என்பதனை இந்தியா அடிக்கடி இலங்கை அரசினை கண்டிப்பதன் காரணமாக இன்று அரசு இந்தியாவை கூட வஞ்சித்துள்ளது.

இலங்கையில் தற்போது சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது .குறிப்பாக கொழும்பு,யாழ் தீவக பகுதிகளை கூட சீன அரசுக்கு தாரை வார்த்திருக்கும் விடையம் இந்த நாட்டை அழிவு பாதைக்கு இட்டு செல்லும் . ஏனென்றால் இந்தியா நேசநாடு . யுத்த காலத்தில் இந்தியா இலங்கைக்கு உதவிகளை வழங்கியிருந்தாலும் சீனா மிக மோசமான ஆயுதங்களை வழங்கி அவை பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இன்று சீனமொழி பொறிக்கப்பட்ட விளம்பர பலகைகள் கூட காட்சிப்படுத்த படுகின்றது.சீன ஆதிக்கத்திற்கு உட்பட்ட காலணித்துவ நாடாக மாறிவருகின்றது இது பாரிய ஆபத்தினை இலங்கைக்கு ஏற்படுத்தும் என தெரிவித்தார்.

# வர்த்தக சமூகத்தினதும், பொதுமக்களினதும்...

மட்டக்களப்பு மாநகர சபைக்கும் வர்த்தக சமுகத்தினருக்கும் இடையிலான தொடர்புகளை மேம்படுத்தும் நோக்கில் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடலானதுநேற்று (19.02.2021) காலை நகர மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும்கருத்து தெரிவித்த அவர், பொதுமக்கள் மாநகர சபையிடமிருந்து எதிர்பார்க்கும் சேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற நாம் பாடுபடுகின்றோம். அதே போன்று பொது மக்களும் வர்த்தக சமூகமும் சபை நடவடிக்கைகற்கு ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும். திண்மக் கழிவுகளை அகற்றுவதில் எமக்கு பாரிய பிரச்சினை உருவாகியுள்ளது. தரம்பிரிக்கப்படாத கழிவுகளை சேகரிக்க வேண்டாம் என் கிழக்கு மாகாண ஆளுநர் அவர்களும் உத்தரவிட்டுள்ளார். ஆனால் மக்கள் அவ்வாறு செய்வதில்லை. அத்துடன் வர்த்தக சமுகத்தினால் ஆற்றக் கூடிய சமூகப் பொறுப்பு மிக்க பணிகள் மற்றும் மாநகர சபையின் அபிவிருத்தி செயற்பாடுகளில் இருக்க வேண்டிய கடப்பாடுகள் தொடர்பிலும் இங்கு வளவாளராக கலந்துகொண்ட இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தினத்தின் சிரேஷ்ட செயற்றிட்ட முகாமையாளர் பிரதீப் பெருமாள் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டன.

இன் நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், மாநகர ஆணையாளர் மா.தயாபரன், பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, ஆசிய மன்றத்தின் நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளர் சார்லஸ் சசிதரன், மட்டக்களப்பு வர்த்த சங்கத்தின் தலைவர் செல்வராஜா உட்பட பிரதேச வர்த்தகர்கள், வியாபார சமுகத்தினர், மட்டக்களப்பு மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# மன்னாரில் இதுவரையும் 51 கொரோனா தொற்றாளர்கள் இனம்...

பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்திலிருந்து அனுப்பப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 18.02.2021 அன்று கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிக்கையில் மன்னார் நகரத்துக்குள் அமைந்துள்ள சலூனில் உள்ள ஒருவருக்கு கொரோனா தொற்று கடைசியாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் இவ் நடப்பு மாதத்தில் (பெப்ரவரி) மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இதுவரைக்கும் 51 நபர்கள் இவ் தொற்று நோய்க்கு உள்ளாகியுள்ளதாகவும் கொரோனா தொற்று நாட்டுக்கு பரவியதிலிருந்து இன்று வரை மன்னாரில் 233 தொற்றாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் இவ் வருடம் (2021) மட்டும் 216 பேர் இவ் தொற்று நோய்க்கு உள்ளாகியிருந்ததாகவும் இவற்றில் மன்னார் பொது வைத்தியசாலையில் 46 நபர்களும் மன்னார் சுகாதார சேவைகள் பகுதியினர் சமூக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் 170 நபர்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரைக்கும் மன்னாரில் கொரோனா தொற்று நோய்க்கு உள்ளாகியவர்களில் 03 நபர்கள் மரணத்தை தழுவியுள்ளனர்.

கொரோனா ஆரம்ப காலத்திலிருந்து இதுவரைக்கும் மன்னார் மாவட்டத்தில் 10082 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பெப்ரவரி மாதம் மட்டும் 1454 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டதில் இன்னும் 179 முடிவுகள் கிடைக்கப்பெற இருப்பதாகவும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# தமிழ்தேசிய சொல்லாடலை நாளாந்த தமிழ்...

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

ஈழ தேசிய விடுதலைக்கான பயணம் பல்வேறு பரிமானங்களைக்கொண்டிருந்தாலும் மிகநீண்டதுமானதென ஏனையவிடுதலைப்போராட்டங்களின் அனுபவங்களுக்கூடாக கற்றுக்கொள்ளமுடிகின்றது.

தற்போதுபெரும்பாலான ஊடகங்கள் முதலாளித்துவ நிகழ்ச்சிநிரல்களையே முன்னெடுக்கின்றது.ஈழவிடுதலைப்போராட்டம் சகல ஏகாதிபத்தியத்துக்கும் எதிரானபோராட்டம் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மக்கள் விடுதலைமைய பத்திரிகைதுறைதான் மாற்றுவழிபத்திரிகைதுறையாக மிளிரமுடியும்.பத்திரிகைதுறை மக்கள் இயக்கம் ஊடாகத்தான் மக்கள் விடுதலையை முன்னெடுக்கவேண்டும்.

வடகிழக்கில் பத்திரிகைத்துறை பன்முனை சவால்களை சந்தித்திருக்கும் இவ்வேளையில் வரலாற்றின் தார்மிகப்பொறுப்பினை உணர்ந்து தமிழ்மக்களின் மாற்று ஊடகமாக சபீட்சம் விளங்கவேண்டும் என்றார்.

# போராட்டத்தில் பங்கேற்றவர்களை தண்டிப்பதை விடுத்து, மக்களின்...

உத்தியோகத்தகர்களினால் இன்று வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தினை முன்னெடுத்தமை தொடர்பில் பொலிஸ் நிலையங்கள் ஊடாக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இந்த வாக்குமூலங்கள் பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று முற்பகல் மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்திற்கு வருகைதந்த பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாக்குமூலங்களை பதிவுசெய்துகொண்டனர்.

வடக்கில் வல்வெட்டித்துறை, கிளிநொச்சி, மாங்குளம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் இருந்தும் கிழக்கில் வாழைச்சேனை, மூதூர், காத்தான்குடி, கல்முனை, சம்மாந்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களில் இருந்து வருகைதந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனிடம் வாக்குமூலங்களை பதிவுசெய்துகொண்டனர்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தின்போது நீதிமன்ற கட்டளை மீறப்பட்டதா, பொதுமக்களுக்கு போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டதா, கொரோனா அச்சுறுத்தல் உள்ள நிலையில் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதா போன்ற பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டு வாக்குமூலங்கள் புதிவுசெய்யப்பட்டன.

முற்பகல் 11 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையில் இவ்வாறு வாக்குமூலங்களை பதிவுசெய்யும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போதே மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அத்துடன், ஜனநாயக போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்லும் நடவடிக்கையானது இந்த நாட்டில் ஜனநாயகம் இல்லையென்பதை உறுதிப்படுத்தும் செயற்பாடாகவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பில் பொதுமக்களுக்கு இடையூறாக...

இருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டையடுத்து மாநகர சபையினால் நேற்று அகற்றப்பட்டது. அரசடி தனியார் வைத்திய சாலைக்கு முன்பாக கடந்த 20 ஆண்டுகளாக இயங்கி வந்த முச்சக்கர வண்டி தரிப்பிடத்திற்கு அருகாமையில் இந்த வாகன தரிப்பிடம் மாநகரசபையினால் குத்தகை அடிப்படையில் தனியாருக்கு வழங்கப்படடிருந்தது.

இவ்வாறு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த குறித்த வாகன தரிப்பிடத்தினால் தனியார் வைத்தியசாலைக்கு வரும் பொதுமக்கள் மற்றும் முச்சக்கர வண்டி தரிப்பிடத்திற்கும் தொடர்ச்சியான இடையூறாக இருப்பதாகவும், முச்சக்கர வண்டிகள் அதன் தரிப்பிடத்தில் நிறுத்தமுடியாமல் வேறு இடங்களில் நிறுத்தவேண்டி ஏற்படுவதால் வாகன விபத்து அபாயம் நிலவுவதாகவும் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியிலாளர் என். சசினந்தன் எடுத்துக் கொண்ட நடவடிக்கைக்கமைவாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவான் மக்கள் நலன் செயற்பாடாக இவ்வாகனத் தரிப்பிடத்தை உடன் அமுலுக்கு வரும் வகையில் அவ்விடத்திலிருந்து அகற்ற நடவடிக்கை மேற்கொண்டார். இம்மக்கள் நலன்சார் செயற்பாட்டினை மேற்கொண்டதற்காக பொதுமக்கள் அரச அதிகாரிக்கும் மாநகர முதல்வருக்கும் நன்றி பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

# பாம்பு தீண்டியதில் 2 மாத குழந்தை பலி....

சுகப்பிரசவமாக ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் ஆண் குழந்தை பிறந்துள்ளது. பிறக்கும் போது 02 கிலோ 100 கிராம் நிறையுடன் காணப்பட்ட இக் குழந்தையை இரு நாட்கள் கழித்தே வீட்டுக்கு கொண்டு சென்றிருக்கின்றனர்.

எதுவித நோய்களுமின்றி வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்ட குழந்தைக்கு தாய்ப்பாலையை உணவாக கொடுத்தும் வந்துள்ளனர்.

வியாழக்கிழமை இரவு (18) பத்து மணியளவில் தாய்ப்பால் அருந்திவிட்டு தூங்கிய குழந்தையை, நள்ளிரவு 12.00 மணிக்கு தாய் எழுந்து பார்த்தபோதும் தூக்கத்திலேயே இருந்ததால் தாயும் தூங்கிவிட்டார்.

பின்னர் வெள்ளிக்கிழமை (19) அதிகாலை 04.00 மணியளவில் மீண்டும் தாய் எழுந்து தாய்ப்பால் கொடுக்க ஆயத்தமானபோது,

குழந்தையானது மயக்க நிலையிலிருப்பதையும், மூக்கு, வாய் ஆகியவற்றால் இரத்தம் வெளியாகியிருப்பதையும் அவதானித்து கணவரையும், குழந்தையின் அம்மம்மாவையும் எழுப்பி விடயத்தை தெரிவித்து செங்கலடி வைத்தியசாலைக்கு குழந்தையை கொண்டு சென்றபோது, குழந்தை ஏற்கனவே மரணமாகிவிட்டது என அங்கிருந்த வைத்தியர் தெரிவித்துள்ளார்.

கரடியனாறு பொலிசாருக்கு விடயம் தெரிவிக்கப்பட்டு, நீதிபதியின் அனுமதியுடன் பிரதேச மரண விசாரணை அதிகாரி மரண விசாரணையை முன்நெடுத்திருந்தார்.

தாய்ப்பால் புரைக்கேறியதால்தான் குழந்தை மரணித்திருக்கிறது என பெற்றோர் தெரிவித்தபோதும்,

குழந்தையின் பிரேதத்தை பார்வையிட்ட மரண விசாரணை அதிகாரி, குழந்தையின் மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் இரத்தக்கறையிருப்பதை அவதானித்ததோடு,

வலது உள்ளங்கையில் பாம்பு தீண்டிய அடையாளத்தோடு, வலது கை உட்பட கழுத்து மற்றும் தலையின் பின் பகுதியெங்கும் நிறமாற்றத்துக்குள்ளாகியிருப்பதையும் அவதானித்து, பாம்பு தீண்டியதால் ஏற்பட்ட மரணமாக இருக்கலாம் என அவர் தெரிவித்தார்.

# முஸ்லிம் மக்களின் விடயங்களையும்...

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மிகவும் சவாலான விடயத்தை சுபீட்சம் குழுமத்தினர் மேற்கொண்டுள்ளார்கள்.பத்திரிகைகளுக்கு நிதிமூலங்களை பெறுவதில் உள்ள இன்றைய சிக்கலில் சுபீட்சம் வெளிவருகின்றது.

இப்பத்திரிக்கை கிழக்கு மாகாணத்துக்கென ஒரு நடுநிலைமையான பத்திரிகையாக வெளிவரவேண்டும்.வாசகர்களுக்கானகருத்துக்களங்களை அமைத்துக்கொடுப்பதுடன் உள்ளதை உள்ளபடி மக்களுக்கு சொல்லும் பத்திரிகையாக பிரகாசிக்க வேண்டும் என்றார்.

# வீரமுனையில் ஆசிரியருக்கு கொரோனா...

இறக்காமத்தில் வேறொரு பாடசாலையில் கற்பிக்கிறார். அவருக்கு கொரோனா உறுதிப்பட்டதையடுத்து புதன்கிழமை இவருக்கும் பிசிஆர் சோதனை மேற்கொண்டபோது இவருக்கும் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதனால் கடந்த வியாழன் வெள்ளி தினங்களில் பாடசாலைக்கு மாணவர் வரவு மிகவும் குறைவாக இருந்ததோடு சம்பந்தப்பட்ட ஆசிரியரோடு நெருக்கமாக இருந்த ஆண்ஆசிரியர்களை வரவேண்டாமென்றும் கூறப்பட்டுள்ளது.

இதனால் கடந்த இரு நாட்களாக பாடசாலையின் கற்றல் கற்பித்தல் சூழல் ஸ்தம்பித நிலையடைந்துள்ளது.

இது தொடர்பில் சம்மாந்துறை வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல் நஜீமிடம் தொடர்புகொண்டு கேட்டபோது ஆசிரியருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து உடனடியாக அதிபருடன் தொடர்புகொண்டு அவரோடு பழகிய ஆசிரியர்களை வெள்ளிவரைக்குமாவது பாடசாலைக்கு வருவதை தவிர்க்கவேண்டும் எனவும் எதற்கும் சுகாதாரத்துறையினரின் அறிவுரைகளை கட்டளைகளை பின்பற்றுமாறும் கூறியிருந்தேன்.என்றார்.



# துணிந்து எழுதுங்கள்

**திருமலை நவம்**

சிரேஸ்ட ஊடகவியலாளர் பொன்.சற்சிவானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதல் பிரதி ஆன்மீக பெரியார்களிடமிருந்து நகர சபைத்தலைவர் நா. இராசநாயகம் பெற்றுக் கொண்டார்.

அதனையடுத்து வருகைதந்திருந்த இலக்கியவாதிகள், கல்வியாளர்கள், அரசியல்கட்சிபிரமுகர்கள் போன்றோருக்கும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் நீங்களும் எழுதலாம் சஞ்சிகையின் ஆசிரியர் எஸ். ஆர். தனபாலசிங்கம், ஆய்வாளர் யதீந்திரா, உள்ளிட்ட பலரும் உரையாற்றினர்..வணக்கத்திற்குரியவர்களான அருட்தந்தை எழில் அவர்களும், அருண்குருக்கள் அவர்களும் ஆசியுரை வழங்கியிருந்தனர். முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர். சி. தண்டாயுதபாணி, ஈபிடிபி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ஆ. புஸ்பராஜா, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள்கட்சியின் திருமலை அமைப்பாளர். கு. நளினகாந்தன், உள்ளிட்ட அதிக மானவர்கள்கலந்து கொண்டனர்.

நிகழ்வில் திருமலை நவம் தொடர்ந்து உரையாற்றுகையில் கிழக்கு மாகாணத்தின் சம்பவங்கள் செய்திகள் அனர்த்தங்கள் அவலங்களை முழுமையாக வெளிக்கொணரக்கூடிய எந்தவொரு பத்திரிகையும் கிழக்கில் இதுவரை வெளிவரவில்லை.

சுபீட்சத்தின் இலக்கு நன்றாகவும் நல்லதாகவும் இருக்கவேண்டும்.சரித்திரகாலம்தொட்டே கிழக்கு ஒரு உணவுக்களஞ்சியமாக விளங்கிவருகின்றது. அதனை வெளிப்படுத்தும் நோக்கில் முன்பக்கஅட்டை அமைந்துள்ளமை சிறப்பான அம்சம்.

1930 இல் முதன் முதலில் கிழக்கு தபால் எனும் பத்திரிகையும், 1980ற்கு முன்னும் பின்னும் பல்வேறு பத்திரிகைகள் வெளிவந்துள்ளன ஆனால் அப்பத்திரிகைகளின் ஆயுட்காலம் மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

1983ற்குப்பிறகு கிழக்குபிராந்தியம் பத்திரிகைத்துறைக்காக பல்வேறு படுகொலைகளை சந்தித்தபிரதேசம்.இருப்பினும் கிழக்கின் செய்திகள் வெளிப்படையாகவரவேண்டும் அதற்காக துணிந்து துணிச்சலான செய்திகளை எழுதுங்கள் என்றார்.



# கால்வாய்களை குடிமனைகளாக பாவிப்போர் அனர்த்தத்தை தவிர்ப்பதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்

## பிரதேச செயலாளர் எம்.பிரதீப்

**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கைவிடப்பட்டிருந்த உவர் நிலத்தில் 40 வருடங்களின் பின் விவசாய நெற் செய்கை பண்ணப்பட்டபோது சரியான வடிகால் அமைப்பு காணப்படாமையால் வெள்ளப் பெருக்கில் நீர் வடிந்தோட முடியாமையால் பெரும்பாலான செய்கை அழிவுக்கு உள்ளாகியுள்ளன. கால்வாய்களை குடிமனைகளாக ஆக்கி வைத்திருப்போர் இவற்றின் மீது கவனம் செலுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தின் கமநல சேவையின் அனுசரனையுடன் மன்னார் தாராபுரம் கோரைக்குளத்தின் கீழ் 40 வருடங்களின் பின்னர் கைவிடப்பட்டிருந்த உவர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற் செய்கையின் வயல் விழாவில் பிரதி மாகாண விவசாய ஆணையாளர் கே.எம்.ஏ சுக்கூர். மன்னார் ஆயர் தேகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் இப் பகுதி விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்ட இவ் விழாவில் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்

பயன்படாமல் இருந்து வரும் காணிகளை விவசாயத்துக்கு பயண்படுத்த வேண்டும் என விவசாயக் கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டிருந்தது. இதற்கமைவாக நான் பயண்படாமல் இருக்கும் நிலங்களை விவசாய உற்பத்திக்கு உட்படுத்தும்படி கோரிக்கை விட்டிருந்தேன்.

இதற்கமைவாக கைவிடப்பட்டிருந்த இவ் கோரைக்குள நிலத்தில் மிகவும் நெற் செய்கையை மேற்கொண்டுள்ளீர்கள். இருந்தும் இவ் விதைப்புக் காலத்தில் வெள்ளம் காரணமாக இவ் பகுதியில் விதைக்கப்பட்ட வயல்கள் பெரும் அழிவுக்கு உட்பட்டபோதும் மூன்றரை ஏக்கர் விவசாயமே பலன் கொடுத்துள்ளது.

நீண்ட காலமாக செய்யப்படாது கைவிடப்பட்டிருந்த இடத்தில் நெற் செய்கை செய்யப்பட்டபோது இதில் ஈடுபட்ட விவசாயிகள் இவ் இடத்தை மீண்டும் கைவிட்டு விடுவார்களோ என நாங்கள் அச்சம் கொண்டிருந்தோம். ஆனால் இங்கு பாதுகாக்கப்பட்ட நெற் செய்கை நல்ல விளைச்சலை தந்துள்ளமையால் இவ் விவசாயிகள் தொடர்ந்து செய்ய ஆர்வம் கொண்டவர்களாக காணப்படுகின்றனர் இது எமக்கு பெரும் மகிழ்வை கொடுக்கின்றது.

ஆயிரம் குளங்களை புணரமைக்கும் திட்டத்தின் கீழ் மன்னார் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இவ் கோரைகுளமும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. சுமார் அறுபது இலட்சம் ரூபா செலவில் இவ் குளம் புணரமைக்கப்பட இருக்கின்றது.

இவ் குளத்தை புணரமைக்கப்பட இருக்கின்றபோது பல தரப்பட்ட பிரச்சனைகள் இருக்கின்றன. இதன் வடிகால் அமைக்கப்படும்போது வாய்க்கால்களில் தற்பொழுது குடிமனைகளாக காணப்படுகின்றன.

இதனால் இங்கு ஏற்பட்ட வெள்ளம் காரணமாக வெள்ள நீர் வெளியேற முடியாத நிலையாலேயே விவசாயம் பாதிப்படைந்திருந்தது. இவ்வாறான பிரச்சனைகளை முடிந்தளவு தீர்வு பெறுவதில் நாங்கள் ஒரு வருடமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இங்குள்ள நீர் சவுத்பார் துருசுக்கு ஊடாகவே செல்லும் பாதை இருக்கின்றது. இதில் பல தரப்பட்ட தடைகள் காணப்படுகின்றது. இதற்கு அருகாமையில் ஒரு குளமும் இருக்கின்றது இவ்வாறான நீரை அங்கு சேகரிக்க கூடிய திட்டத்தையும் அதன் வாய்க்காலை திருத்துவதற்கும் அனர்த்த முகாமைத்து திணைக்கள்த்தினூடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கு மக்களினதும் பொது அமைப்புக்களின் ஒத்துழைப்பும்; மிக அவசியமானது.

இங்குள்ள நீரை நாம் சரியான முறையில் சேகரித்தால் இரு போகமும் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அத்துடன் மன்னார் தீவின் கடல் அமைப்பும் சில சமயம் கடல் நீர் உள்வரும்போதும் அவற்றை உடன் வெளியேற்ற முடியாத நிலையும் உருவாகலாம். ஆகவே இங்கு வடிகால் அமைப்பை சரியான முறையில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியமும் உள்ளன.

என்னைப் பொறுத்த மட்டில் அருட்பணியாளர்கள் சமய விடயத்தில் மட்டும் தான் செயல்படுகின்றார்கள் என எண்ணினேன். ஆனால் இங்கு கவனிக்கும் போது மக்களுக்கு எடுத்துக்காட்டும் தன்மையில் கைவிடப்பட்ட நிலத்தில் விவசாயத்தை மேற்கொள்ள முடியும் என எண்பித்துள்ளனர்.

இதற்கு விவசாய திணைக்களம் மற்றும் கமநல திணைக்களம் ஆகியன தகுந்த ஒத்துழைப்பை வழங்கியிருப்பது பாராட்டுக்குரியது கால் நடை பிரச்சனை காணப்படுகின்றது. விவசாயம் செய்யும்போது கால் நடை வளர்ப்போர் பொறுப்புடன் செயல்பட வேண்டும். இதற்கு பிரதேச சபையினரும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.




# கிண்ணியாவில் மாணவி ஒருவருக்கு கொரோனா தொற்று

## 15 மாணவர்கள் தனிமைப்படுத்தலில்

**(எப்.முபாரக்)**

கிண்ணியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலையொன்றில் உயர்தர வகுப்பைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டதையடுத்து அந்த வகுப்பைச் சேர்ந்த 15 மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என குறிஞ்சாக்கேணி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.ஏ. அஜீத் தெரிவித்தார்.

எனினும் மேற்படி மாணவர்களுக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொண்டபோது எவருக்கும் தொற்று உறுதிசெய்யப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மாணவர்கள் சுகாதார வழிமுறைகளை முறையாகப் பின்பற்றியதால் அவர்கள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகவில்லை என்றும் எனவே பெற்றோர் வீண் அச்சம் கொள்ள தேவையில்லை என்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.ஏ.அஜீத் தெரிவித்தார்.

மேற்படி வித்தியாலயத்துக்கு இன்று (19) 10 சதவீதமான மாணவர்களே சமூகமளித்தனர் என்றும் ஆசிரியர்களின் வரவு 99 சதவீதமாகக் காணப்பட்டதாகவும் பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.









## கிண்ணியா அப்துல்லா சேமனார் கட்டு ஆமி பாலம் சேதமடைவால் விவசாயிகள் பாதிப்பு



(எப்.முபாரக்)

திருகோணமலை, கிண்ணியா அப்துல்லா சேமனார் கட்டு ஆமி பாலம் அண்மையில் பெய்த கனமழை காரணமாக முழுமையாக சேதமடைந்துள்ளதால் விவசாயிகள் இதனூடாக பயணிப்பதில் பெரும் சிரமத்திற்கு உள்ளாவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த பாலம் சூரங்கல் - கற்குழி வீதியில் கடந்த 2004 ஆண்டு இராணுவத்திரால் நிர்மாணிக்கப்பட்டது.

கிண்ணியா பீங்கான் உடைந்த ஆற்றில் வடிச்சல் நீர்மட்டம் உயர்ந்து இப் பாலம் உடைவால் அப்பிரதேசத்தில் அரிப்புக்கு உள்ளாகி முற்றாக விவசாயிகள் சொல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் விவசாயிகள் உரிய பகுதிக்குச் செல்வதற்கு வீணாக 05 கிலோ மீற்றர் தூரம் சுற்றி செல்ல வேண்டி அவல நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

விதைப்பு மற்றும் அறுவடை காலங்களிலும், விதை நெல் கொண்டு செல்வதிலும் மருந்துப் பொருட்கள் மற்றும் பயளை கொண்டு செல்வதிலும் தங்களது விளைச்சலை வீட்டுக்கு கொண்டு வருவதிலும் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறு இருந்தும் எவரும் இதனை பற்றி அரசியல் வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் கவலை கொள்ளவதாகத் தெரியவில்லை எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்

இவ்வாறு உடைந்து காணப்படும் பாலத்தின் வழியாக அவசர நேரத்தில் இதனூடாக குறுக்காக கடப்பதில் முதலைகள் நடமாடுவதாகவும் விவசாயிகள் அச்சம் கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பாலத்தை அமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அரியநேத்திரனிடம் பொலிஸார் விசாரணை



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையுமான மக்கள் எழுச்சிப்பேரணியில் கடந்த 04 ஆம் திகதியன்று மட்டக்களப்பில் கலந்து கொண்டதாக கூறி புகைப்படங்களுடன் முன்னாள்பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுகட்சி ஊடகசெயலாளரும், பட்டிருப்பு தொகுதி இலங்கை தமிழரசுகட்சி தலைவருமான பா.அரியநேத்திரன் இல்லத்திற்கு வெள்ளிக்கிழமையன்று மு.ப 11.30, மணிக்கு சென்ற மட்டக்களப்பு பொலிஸார் முறைப்பாடு ஒன்றை பதிவுசெய்துள்ளனர்.

இதன்போது பா.அரியநேத்திரன் தமக்கு எந்த பொலிஸ் நிலையங்களாலும் எந்த வித நீதிமன்ற கட்டளைகளும் கிடைக்கவில்லை என்பதை தெளிவுபடுத்தி வாக்குமூலம் வழங்கியதாக தெரிவித்தார்.

பேரணியில் அரியநேத்திரன் கலந்து கொண்டதாக கூறப்படும் கலர் புகைப்படங்களை பொலிசார் காண்பித்தனர். ஜனநாயகரீதியான மக்கள் போராட்டங்களில் அரசியல்கட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்வது தவறில்லை என்பதை வலியுறுத்தியதுடன் தாம் கலந்துகொண்டது உண்மை எனவும் நீதிமன்ற தடை உத்தரவு தமக்கு வழங்கப்படவில்லை என்பதையும் மீண்டும் வலியுறுத்தியதாக மேலும் கூறினார்.

அரியநேத்திரனின் இல்லம் மட்டக்களப்பு மாவட்டம் படுவான்கரைபெருநிலம் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவில் அம்பிளாந்துறைஊராக இருந்தபோதும் மட்டக்களப்பு பொலிஸாரே இந்த வாக்குமூலத்தை பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திங்கட்கிழமையில் மட்டுமே அதிபர் ஆசிரியர்கள் அலுவலகம் வரவேண்டும்

### சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் சஹுதுல் நஜீம் தெரிவிப்பு



(வி.ரி.சகாதேவராஜா)

இனிமேல் அதிபர் ஆசிரியர்கள் அலுவகத்திற்கு வரவேண்டுமாகவிருந்தால் திங்கட்கிழமையில் மட்டுமே அலுவலகம் வரவேண்டும் என சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தெரிவித்தார்.

சம்மாந்துறை வலய அதிபர்களுக்கான கூட்டம் தாறுஸ்ஸலாம் மகா வித்தியாலய மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.அங்குரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:

பாடசாலையில் வைபவங்கள் நடாத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டுமென கல்வி அமைச்சு செயலாளரின் அறிவுறுத்தியுள்ளார் எனவே உடனடியாக அத்தகைய பைவங்களை நிறுத்தவேண்டும்.

கொவிட் 19 பாதுகாப்பு விடயங்களை பாடசாலையில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் .

பாடசாலை மாணவர்களுக்கான பகல் உணவு சீருடை,பாதணி வவுச்சர் விநியோகிக்கப்பட்டுள்ளது. தரம் 1 இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட மாணவர்களுக்கு அவர்களது வீடுகளில் நடுவதற்கு வழங்கப்பட்ட பழமரங்களின் முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

2021-பாடசாலை பௌதீக விபரம் மற்றும் 2021ஆம் கல்வி ஆண்டிற்கான கல்வி அபிவிருத்தி பற்றிய பகுப்பாய்வுச் சுருக்கம் பவர்பொயின்ற சமர்ப்பணம் ஊடாக கலந்துரையாடி அரச பொதுப் பரீட்சைகளின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

அதில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

# பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்தில் இலவச கல்விக் கருத்தரங்கு





(கமல்)

புலம் பெயர்ந்து வாழும் கனடா வாழ் மக்களின் கல்வி அமைப்பு எனும் நிறுவனத்தின் நிதி உதவியுடன் இம்முறை க.பொ.த சாதாரண தர பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் ஆ.புட்கரன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கிற்கான ஆரம்ப நிகழ்வில் அமைப்பின் மாவட்ட பிரதிநிதி கி.சுதர்சன் பட்டிருப்பு கல்வி வலயத்தின் உதவிக் கல்வி பணிப்பாளர். எஸ்.சுரேஸ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்தரங்கினை ஆரம்பித்து வைத்தனர்.

புலம் பெயர் அமைப்புக்கள் எனும் அடிப்படையில் பின் தங்கிய பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் கரிசினை செலுத்தி அதனை முன்னேற்ற வேண்டும் எனும் நோக்கோடு முன்னெடுக்கப்படுகின்றமை இவ்வாறான செயற்பாடுகள் பாராட்டுக்குரியதாகும் என உதவிக்கல்வி பணிப்பாளர் இதன் போது தெரிவித்தார்.

## மட்டக்களப்பு மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய சங்காபிஷேகம்





மட்டக்களப்பு மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய சங்காபிஷேக பூசை நேற்று அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டு மிகவும் எளிமையான முறையில் கொரோனா தொற்றுக்காரணமாக சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்துக்கொண்டு மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு ஜெகதீசக் குருக்கள் மற்றும் அவரது குழுவினரால் விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. ஆலய கும்பாபிஷேகம் இடம்பெற்று 4 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 108 சங்குகளை கொண்டு இவ் விஷேட சங்காபிஷேக நிகழ்வு இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

பூசை நிகழ்வுகளில் மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காளர் திருமதி இந்திராமோகன் உள்ளக கணக்காய்வு கிளை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# கஷ்ட பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரண உதவி











ந.குகதர்சன்

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட வேப்பவெட்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு சுதந்திர மனித அபிவிருத்திக் கழகத்தின் 24 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு கற்றல் உபகரணங்கள் இன்று வழங்கி வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எஸ்.சத்தியநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.க.அகிலா, கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.ஜெயக்குமார், சுதந்திர மனித அபிவிருத்திக் கழகத்தின் நிதிப் பொறுப்பாளர் எஸ்.தமிழினி, கழகத்தின் பிரதம ஊடக இணைப்பாளரும், கல்குடாத் தொகுதி பொறுப்பாளருமான ஊடகவியலாளர் ந.குகதர்சன், கழக பிரதிநிதிகள், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட வேப்பவெட்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

அத்தோடு சுதந்திர மனித அபிவிருத்திக் கழகத்தின் இருப்பதி நான்காவது வருட பூர்த்தியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுடன் கேக் வெட்டி கொண்டாடப்பட்டதுடன், மாணவர்களுக்கு இனிப்பு பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட வேப்பவெட்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையானது அதிகஷ்ட பிரதேச பாடசாலையாகவும், வறிய மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலையாகவும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## சம்பூர் கிராமத்தில் வீட்டின் மீது விழுந்த பாரிய மரம்

(பொன்ஆனந்தம்)

திருகோணமலை சம்பூர் கிராமத்தில் ஏழைக்குடும்பமொன்றின் வீட்டின் மீது பாரிய மா மரமொன்று முறிந்து விழுந்ததில் குறித்தவீடு முற்றாக சேதமடைந்துள்ளது.

வீட்டுக்காணியிலிருந்த மாமரமொன்றே முறிந்து விழுந்ததாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயினும் வீட்டுரிமையாளர்களுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. வீட்டின் சுவர் மற்றும் கூரைகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக அயலவர்கள் தெரிவித்தனர்.

குறித்த குடும்பம் வறிய குடும்பமென்பதால் குறித்த வீட்டை திருத்த நடவடிக்கை எடுக்குமாறு பொது அமைப்புக்களிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. வீட்டின் மீது விழுந்த மரங்கள் வெட்டி அகற்றப்பட்டன.



# அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலையரசனிடம் திருக்கோவில், அக்கரைப்பற்று பொலிஸார் விசாரணை



(சந்திரன் குமணன்)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி எழுச்சி பேரணியில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்தவராசாகலையரசனிடம் நேற்று வெள்ளிக்கிழமை (19) திருக்கோவில், மற்றும் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையங்களின் பொலிஸார் 3 மணிநேர விசாரணை மேற்கொண்டு வாக்குமூலத்தை பெற்றுள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி தொடக்கம் 6 திகதி வரையிலான பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி எழுச்சி பேரணியில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் கலந்து கொள்வதற்கு எதிரா திருக்கோவில். கல்முனை, அக்கரைப்பற்று பொலிஸார் நீதிமன்ற தடை உத்தரவு ஒன்றை பெற்று அவரிடம் வழங்கினர்.

இந்த நிலையில் தடை உத்தரவை மீறி இந்த பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு எதிராக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதனடிப்படையில் பாராளுமன்ற உறப்பினர் த.கலையரசனின் வீட்டிற்கு இன்று காலை 9 மணிக்கு திருக்கோவில், மற்றும் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையங்களின் பொலிஸார் சென்று அவரிடம் சுமார் 3 மணிநேர விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

இதேவேளை தடை உத்தரவை மீறி பேரணில் கலந்து கொண்ட த.கலையரசனுக்கு எதிராக பொலிஸார் கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பானை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது .




## மட்டக்களப்பில் பேடன் பவல் தின நிகழ்வு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சாரணிய இயக்கத்தின்தந்தையாக கருதப்படும் பேடன் பவல் அவர்களின் பிறந்த தினம் பெப்ரவரி 22 ஆந் திகதி உலகளாவிய ரீதியில் அனுட்டிக்கப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்ட பேடன்பவல் தின நிகழ்வானது மாவட்ட சாரணியர் சங்கத்தின் ஏற்பாட்டிலும் மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் எதிர்வரும் பெப்ரவரி 22 ஆம் திகதி திங்கட்கிழமை மட்டக்களப்பு நீரூற்றுப்பூங்காவில் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் விசேட நிகழ்வில் தாய்ப் பூமியை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளுக்கு அமைய மர நடுகையும் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ராபர்ட் பேடன் பவல் பிரபு 1857 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆந் திகதி இங்கிலாந்தில் பிறந்தார். இவரால் 1907 ஆம் ஆண்டு சாரணர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. இவர் 1910 இல் சிறுமிகள் சாரணர் இயக்கத்தையும் தொடங்கினார்.

இளைஞர்களுக்கான சாரணியம் என்ற நூலை 1908 ஆம் ஆண்டு பதிப்பித்தார். ஆப்பிரிக்காவிற்குத் திரும்பிய பேடன்பவுல் தனது புத்தகமான 'எயிட்ஸ் டு ஸ்கவுட்டிங்' வெற்றிகரமாக விற்பனை ஆவதனையும் அவை பல இளைஞர்களையும் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்குப் பயன்படுத்தப்படுவதையும் அவதானித்தார். 1907 ஆம் ஆண்டு சாரணியத்தினை ஓர் பரிசோதனை முயற்சியாக 20 சிறுவர்களுடன் தொடங்கினார்.

முதலில் தேசிய ரீதியில் துவங்கப்பட்ட இம் முயற்சி பின்னர் உலக அளவில் புகழ்பெற்றது. 1920 இல் முதலாவது உலக சாரணிய ஐம்போரியானது ஒலிம்பியாவில் நடைபெற்றது.

## பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மூடப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் பாதுகாப்பு நிலையம்



( எஸ்.தில்லைநாதன்)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை சிற்றுண்டிச் சாலை, சைக்கிள் பாதுகாப்பு நிலையம் என்பன சுமார் மூன்று வாரங்களாக மூடப்பட்டுள்ளதால் நோயாளர்கள் பார்வையாளர்கள்பெரிதும் சிரமரங்களையும் கஷ்டங்களையும் எதிர்நோக்கியுள்ளனர். இவற்றின் குத்தகை ஒப்பந்தகாலம் கடந்த மாதம்31 ஆம் திகதியுடன் நிறைவு பெற்றதைத்தொடர்ந்து புதிதாக குத்தகைக்கு வழங்குவதற்கு கேள்விப்பத்திரம் கோரப்பட்டது. இதன் மூலம் முதலாவதாகத் தெரிவான ஒப்பந்தகாரர் ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துவிட்டார். இவருக்கு அடுத்ததாகக் கேள்வித்தொகை கேட்ட விண்ணப்பதாரிக்கு ஒப்பந்தம்வழங்கப்படவில்லை.இதனைத் தொடர்ந்து குறித்த கேள்விப்பத்திரம் ரத்துச்செய்யப்பட்டு புதிதாக கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளது.

சிற்றுண்டிச் சாலை சைக்கிள் மோட்டார் சைக்கிள்பாதுகாப்பு நிலையும்ஆகியவற்றை நடத்துவதற்குநேரகாலத்துடன் புதியஒப்பந்நகாரரை தெரிவு செய்யப்படவில்லை.இதன் காரணமாக வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை சைக்கிள் மோட்டார் சைக்கிள் ஆகியன இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.இவை மூடப்பட்டுள்ளதால் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் சுடுதண்ணீர் மற்றும் உணவு வகைகளை பெற்றுக் கொள்ள வைத்தியசாலைக்கு வெளியே உள்ள சிற்றுண்டிச் சாலைகளை நாட வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. அதே வேளை வெளிநோயாளர்கள் பிரிவில் சிகிச்சை பெறவும் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களைப் பார்வையிடவும் வரும் பொதுமக்கள் சைக்கிள் மோட்டார் சைக்கிள்களை பாதுகாப்பாக நிறுத்த இடமின்றி வைத்தியசாலை முன் வீதியின் இருமருங்கும் நிறுத்துகின்றனர். இதனால் வீதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

## சுவிஸ் நாட்டில் வசிக்கும் தம்பதியினரால்

# வடக்கு, கிழக்கு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு











சுவிஸ் நாட்டில் வசிக்கும் புங்குடுதீவு மற்றும் மட்டக்களப்பு முறக்கொட்டான்சேனையைச் சேர்ந்த திரு.திருமதி கிருஷ்ணகுமார் தர்சினி தம்மதிகளின் ஏகபுத்திரி செல்வி லக்சியாவின் மங்கல மஞ்சள் நன்னீராட்டு (ருதுசோபன) நிகழ்வை மேலும் சிறப்பாக கொண்டாடும் முகமாக தாயகத்தில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் பல்வேறு சமூகப் பணிகள் செய்துள்ளனர்.

வவுணதீவு ,புதுமண்டபத்தடி ,இருட்டுச்சோலை மடு எனும் கிராமத்தில் பொண்ணாங்கண்ணித் தோட்டத்தில் அடிப்படை வசதிகள் ஏதுமில்லாத 'பாரதி முன்பள்ளியை' பொறுப்பெடுத்து, முன்பள்ளிக்குத் தேவையான உபகரணங்கள் உட்பட முன்பள்ளி மாணவச்செல்வங்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி, நேற்று முன்தினம்புளொட் முக்கியஸ்தரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான திரு க விமலநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வின் போது மீண்டும் புதுப் பொலிவுடன் பாரதி முன்பள்ளி தொடங்கப்பட்டது.

இந்திகழ்வில் பிரதம விருந்தினராக மண்முனை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திரு சண்முகராஜா அவர்கள் கலந்து சிறப்பிக்க, சிறப்பு விருந்தினராக் மாணிக்கதாசன் நற்பணி மன்றத்தின் கிழக்கு மாகாணங்களின் பொறுப்பாளர்களில் ஒருவரும், மண்முனை மேற்கு பிரதேச சபையின் உப தவிசாளரும், புளொட் அமைப்பின் உப தலைவர்களில் ஒருவரான தோழர் கேசவன் என அழைக்கப்படும் திரு பொன் செல்லத்துரை அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

அத்தோடு திருமதி தர்சினி குமார் அவர்களின் உறவினரான ஆசிரியர் திரு கனகராஜா தியாகராஜா அவர்களும், அந்தக் கிராமத்தின் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் திரு.கி.நாகமணி அவர்களும், சங்கத்தின் உறுப்பினர்களும், முன்பள்ளி மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் மற்றும் கிராமிய பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

மேற்படி முன்பள்ளிக்கான கற்றல் உதவிகளும், செல்வி லக்சியா கிருஷ்ணகுமாரின் 'மங்கல மஞ்சல் நன்னீராட்டு விழாவை' முன்னிட்டு சுவிசில் வசிக்கும் கிருஷ்ணகுமார் தர்சினி தம்பதிகளின் நிதிப்பங்களிப்பில் செய்யப்பட்டதாகும். அந்த வகையில் முன்பள்ளியினை சீரமைத்து அதற்குத் தேவையான அலுமாரி, பாடசாலை உபகரணங்கள் மற்றும் முன்பள்ளி மாணவர்களின் கற்றலுக்கு தேவையான அனைத்து விதமான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், விசேடமாக விழாவில் கலந்து சிறப்பித்த முன்பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரிய குழாத்தினர், விருந்தினர்கள், பொதுமக்கள் என சகலருக்குமான விசேட விருந்துணவும் பரிமாறப்பட்டு இனிதாக நிறைவு செய்யப்பட்டது.

ஏற்கனவே மேற்படி திரு.திருமதி. கிருஷ்ணகுமார் தர்ஷினி தம்பதிகளினால் பல்வேறு வகையில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தகது. அந்த வகையில் தமது ஏகபுத்திரியான செல்வி லக்சியாவின் மங்கல மஞ்சள் நீராட்டு விழாவை மேலும் சிறப்பிக்கும் வகையில், வாழும் பிள்ளையின் சார்பாக வளரும் தென்னம் பிள்ளைகள் ஒரு தொகுதியை வவுனியா மணிப்புரத்தில் உள்ள ஆனந்த இல்லத்தில் வாழும் அன்னையர்களின் எதிர்கால பொருளாதார விருத்திக்காக அமைக்கப்பட்டு வரும் தென்னந் நோட்டத்திற்கு நல்லின தென்னம் பிள்ளைகளும் வழங்கப்படது.

இவ்வாறு தமது ஒரே மகளின் மஞ்சல் நீராட்டு விழாவை 'மாணிக்கதாசன் நற்பணி மன்றமூடாக' வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் செயல்படுத்திய திரு திருமதி கிருஸ்ணகுமார் தர்சினி தம்பதிகளை வாழ்த்துவதோடு, செல்வி லக்சியாவின் எதிர்காலம் சிறக்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம்.நலிவுற்றவர்களுக்கே நற்பணி இயக்கம். மக்களுக்காகவே மாணிக்கதாசன் நற்பணி மன்றம்.தலைமையகம்,மாணிக்கதாசன் பவுண்டேசன், புகையிரத நிலைய வீதி,வவுனியா.

